செ.வெ.எண்– 49 தேதி –31.01.2018

# செய்தி வெளியீடு

## ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மறுவரையறை வரைவு கருத்துருக்கள் மீது பொதுமக்கள் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணை மனுக்கள் பெறப்பட்டது மண்டல அளவில் மறுவரையறை ஆணைய குழு கூட்டம் நடைபெறுதல்

தமிழ்நாடு சட்டம் 23/2017 மற்றும் தமிழ்நாடு மறுவரையறை ஆணைய ஒழுங்குமுறைகளின்படி 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை அடிப்படையாகக் கரூர் மாவட்டத்தில்,கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி வார்டுகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டு வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள் பொதுமக்கள் பார்வைக்கு 27.12.2017 அன்று வெளியிடப்பட்டது.

வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மீதான ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் எழுத்து பூர்வமாக தெரிவிக்க 27.12.2017 முதல் 12.01.2018 வரை கால அவகாசம் அளிக்கப்பட்டது.

கரூர் மாவட்டத்தில் வரைவு வார்டு மறுவரையறை கருத்துக்கள் மீது அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் குறித்து மாவட்ட மறுவரையறை அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், மறுவரையறை ஆணைய உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் மறுவரையறை ஆணைய குழு கூட்டம் எதிர்வரும் 10.02.2018 அன்று காலை சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் ஏற்கனவே மனு அளித்தவர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை மறுவரையறை ஆணைய குழுவிடம் தெரிவிக்கலாம். ஏற்கனவே ஆட்சேபணை மனு கொடுத்தவர்களை தவிர மற்றவர்களுக்கு அனுமதி இல்லை.மற்றும் இக்கூட்டத்தில் புதிய ஆட்சேபணைகள் குறித்த மனுக்கள் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது என்ற விவரம் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினருக்கு தகவலுக்காக தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. கோவிந்தராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு– செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.